## நெல்லிக்குப்பம் நகராட்சி
## நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்

2020–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ம் தேதி (30.09.2020) புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.பிரபாகரன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**மன்றபொருள்.1.** 31.08.2020ல் விலைப்புள்ளி கோரியதில், வாகனத்தில் வைத்து அடிக்கக்கூடிய சிறிய புகைப்பான் எந்திரத்தினை சரி செய்து வழங்கிட கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. விபரம் பின்வருமாறு

| வ.எண். | விலைப்புள்ளிதாரர்களின் பெயர் | ஒன்றின் விலை |
|---|---|---|
| 1 | விக்னேஸ்வரி இண்டஸ்ரியல் புரேஎடக்ட்ஸ்,<br>H 110L, பொன்னம்பலம் சாலை,<br>கே.கே.நகர், சென்னை – 78. | ரூ.5,720/– |
| 2 | S.N. எண்டர் பிரைசஸ்,<br>பிளாட் எண்.6, கதவு எண்.1G, ராஜாஜி அவென்யூ, வளசரவாக்கம்,<br>சென்னை–87. | ரூ.5,280/– |
| 3 | சிஸ்டம் என்ஜினியரிங்,<br>எண்.1, அன்னை சத்யா நகர்மெயின் ரோடு,<br>செந்தமிழ் நகர், ராமாபுரம்,<br>சென்னை. | ரூ.4,920/– |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.3ல் கண்டுள்ள சிஸ்டம் என்ஜினியரிங், ராமாபுரம், சென்னை–89 என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி மற்ற இரண்டு நிறுவனங்களை விட விலை குறைவாக இருப்பதினால், அந்நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதற்கும், அதற்கான பட்டியல் தொகை வழங்குவதற்கும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றத்தின் பதிவுக்கு வைக்கலாம்

**ந.க.எண்.2336/2020/எச்1**

**தீர்மான எண் : 126 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள்.2.** 31.08.2020ல் விலைப்புள்ளி கோரியதில், கையினால் எடுத்து அடிக்கக்கூடிய சிறிய புகைப்பான் எந்திரத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகள் அகற்றி சர்வீஸ் செய்து வழங்கிட கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. விபரம் பின்வருமாறு

| வ.எண். | விலைப்புள்ளிதாரர்களின் பெயர் | ஒன்றின் விலை |
|---|---|---|
| 1 | சிஸ்டம் என்ஜினியரிங்,<br>எண்.1, அன்னை சத்யா நகர்மெயின் ரோடு,<br>செந்தமிழ் நகர், ராமாபுரம்,<br>சென்னை. | ரூ.4,940/– |
| 2 | விக்னேஸ்வரி இண்டஸ்ரியல் புரேஎடக்ட்ஸ்,<br>H 110L, பொன்னம்பலம் சாலை,<br>கே.கே.நகர், சென்னை – 78. | ரூ.5,270/– |
| 3 | S.N. எண்டர் பிரைசஸ்,<br>பிளாட் எண்.6, கதவு எண்.1G, ராஜாஜி அவென்யூ, வளசரவாக்கம், | ரூ.5,580/– |

| | சென்னை–87. | |
|---|---|---|

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள சிஸ்டம் என்ஜினியரிங், ராமாபுரம், சென்னை–89 என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி மற்ற இரண்டு நிறுவனங்களை விட விலை குறைவாக இருப்பதினால், அந்நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கிடுவது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றத்தின் பதிவுக்கு வைக்கலாம்

**ந.க.எண்.2336/2020/எச்1**

**தீர்மான எண் : 127 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**<u>மன்றபொருள்.3.</u>** இந்நகராட்சிக்கு சிறிய புகைப்பான் எந்திரங்கள் 2 எண்ணிக்கைகள் சப்ளை செய்வதற்கு 03.09.2020ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில், மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. விபரம் பின்வருமாறு

| வ.எண். | விலைப்புள்ளிதாரர்களின் பெயர் | ஒன்றின் விலை |
|---|---|---|
| 1 | சிஸ்டம் என்ஜினியரிங்,<br>எண்.1, அன்னை சத்யா நகர்மெயின் ரோடு,<br>செந்தமிழ் நகர், ராமாபுரம்,<br>சென்னை. | ரூ.72,600/– |
| 2 | S.N. எண்டர் பிரைசஸ்,<br>பிளாட் எண்.6, கதவு எண்.1G, ராஜாஜி அவென்யூ, வளசரவாக்கம்,<br>சென்னை–87. | ரூ.74,500/– |
| 3 | விக்னேஸ்வரி இண்டஸ்ரியல் புரோடக்ட்ஸ்,<br>H 110L, பொன்னம்பலம் சாலை,<br>கே.கே.நகர், சென்னை – 78. | ரூ.73,500/– |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள சிஸ்டம் என்ஜினியரிங், ராமாபுரம், சென்னை–89 என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி மற்ற இரண்டு நிறுவனங்களை விட விலை குறைவாக இருப்பதினால், அந்நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்குவதற்கும் , பட்டியல் தொகை வழங்குவதற்கும் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் பதிவுக்கு வைக்கலாம்

**ந.க.எண்.2336/2020/எச்1**

**தீர்மான எண் : 1328 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**<u>மன்றபொருள்.4.</u>** இந்நகராட்சி பொது சுகாதாரம் கோட்டம்–1ல் அமைந்துள்ள மழைநீர் செல்லக்கூடிய பிரதான கால்வாய்கள் செயின்டோசர் (Hitachi) வாகனம் மூலம் செடி, கொடிகள் அகற்றி தூர் வாரிடும் பணிக்கு 22.09.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. விபரம் பின்வருமாறு

| வ.எண். | ஒப்பந்ததாரர்களின் பெயர் | ஒரு மணி நேரத்திற்கு வாடகை தொகை | வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | திருமதி.எஸ்.புவனேஸ்வரி,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>நெல்லிக்குப்பம். | ரூ.1,550/– | ரூ.2,500/–<br>சலான் எண்.3148,<br>நாள்.21.09.2020 |
| 2 | திருமதி.எஸ்.பரிமளா,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>நெல்லிக்குப்பம். | ரூ.1,750/– | ரூ.2,500/–<br>சலான் எண்.3154,<br>நாள்.21.09.2020 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திருமதி.எஸ்.புவனேஸ்வரி, என்பவரின் ஒப்பந்தப்புள்ளி திருமதி.எஸ்.பரிமளா என்பவரின் ஒப்பந்த புள்ளிகளை விட குறைவாக உள்ளதினால், திருமதி.எஸ்.புவனேஸ்வரி, என்பவருக்கு பணி உத்திரவு வழங்கிடுவது குறித்து மன்றத்தி அனுமதிக்கு வைக்க வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:
1. வரிசை எண்.1ல் கண்டுள்ள திருமதி.எஸ்.புவனேஸ்வரி, ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதினால், பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தினை பொது நிதி அல்லது தூய்மை சேவை கட்டண(SUC) நிதியிலிருந்து செலவு செய்திட அனுமதி வழங்கலாம்.
3. பருவ மழையின் காரணமாக அவசர அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதினை மன்றம் அங்கீரிக்கலாம் .

**ந.க.எண்.2336/2020/எச்1**

**தீர்மான எண் : 129 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.5.</u>** இந்நகராட்சி பொது சுகாதாரம் கோட்டம்–2ல் அமைந்துள்ள மழைநீர் செல்லக்கூடிய பிரதான கால்வாய்கள் செயின்டோசர்(Hitachi) வாகனம் மூலம் செடி, கொடிகள் அகற்றி தூர் வாரிடும் பணிக்கு 22.09.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. விபரம் பின்வருமாறு

| வ.எண். | ஒப்பந்ததாரர்களின் பெயர் | ஒரு மணி நேரத்திற்கு வாடகை தொகை | வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | திருமதி.எஸ்.புவனேஸ்வரி,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>நெல்லிக்குப்பம். | ரூ.1,550/– | ரூ.2,500/–<br>சலான் எண்.3149,<br>நாள்.21.09.2020 |
| 2 | திருமதி.எஸ்.பரிமளா,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>நெல்லிக்குப்பம். | ரூ.1,750/– | ரூ.2,500/–<br>சலான் எண்.3155,<br>நாள்.21.09.2020 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திருமதி.எஸ்.புவனேஸ்வரி, என்பவரின் ஒப்பந்தப்புள்ளி திருமதி.எஸ்.பரிமளா என்பவரின் ஒப்பந்த புள்ளிகளை விட குறைவாக உள்ளதினால், திருமதி.எஸ்.புவனேஸ்வரி, என்பவருக்கு பணி உத்திரவு வழங்கிடுவது குறித்து மன்றத்தி அனுமதிக்கு வைக்க வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:
1. வரிசை எண்.1ல் கண்டுள்ள திருமதி.எஸ்.புவனேஸ்வரி, ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதினால், பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தினை பொது நிதி அல்லது தூய்மை சேவை கட்டண(SUC) நிதியிலிருந்து செலவு செய்திட அனுமதி வழங்கலாம்.
3. தற்சமயம் பருவ மழை துவங்கிவிட்டதினால் அவசர அவசியத்தினை கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதினை மன்றம் அங்கீரிக்கலாம் .

ந.க.எண்.2334/2020/எச்1

**தீர்மான எண் : 130 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.6.</u>** இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள பிரதான கால்வாய்களை செயின்டோசர்பணி செய்ய இயலாத இடத்தில் JCB வாகனம் மூலம் வாடகை அடிப்படையில் கால்வாயில் உள்ள செடி, கொடிகளை அகற்றி தூர் வாரிடும் பணிக்கு 22.09.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. விபரம் பின்வருமாறு

| வ.எண். | ஒப்பந்ததாரர்களின் பெயர் | ஒரு மணி | வைப்புத் தொகை |
|---|---|---|---|

| | | நேரத்திற்கு வாடகை தொகை | |
|---|---|---|---|
| 1 | திருமதி.எஸ்.புவனேஸ்வரி,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>நெல்லிக்குப்பம். | ரூ.950/– | ரூ.2,500/–<br>சலான் எண்.3150,<br>நாள்.21.09.2020 |
| 2 | திருமதி.எஸ்.பரிமளா,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>நெல்லிக்குப்பம். | ரூ.1,100/– | ரூ.2,500/–<br>சலான் எண்.3156,<br>நாள்.21.09.2020 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திருமதி.எஸ்.புவனேஸ்வரி, என்பவரின் ஒப்பந்தப்புள்ளி திருமதி.எஸ்.பரிமளா என்பவரின் ஒப்பந்த புள்ளிகளை விட குறைவாக உள்ளதினால், திருமதி.எஸ்.புவனேஸ்வரி, என்பவருக்கு பணி உத்திரவு வழங்கிடுவது குறித்து மன்றத்தி அனுமதிக்கு வைக்க வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:
1. வரிசை எண்.1ல் கண்டுள்ள திருமதி.எஸ்.புவனேஸ்வரி, ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதினால், பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தினை பொது நிதி அல்லது தூய்மை சேவை கட்டண(SUC) நிதியிலிருந்து செலவு செய்திட அனுமதி வழங்கலாம்.
3. பருவ மழை துவங்கிவிட்டதினால் அவசர அவசியத்தினை கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதினை மன்றம் அங்கீரிக்கலாம் .

**ந.க.எண்.2335/2020/எச்1**

**தீர்மான எண் : 131 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.7.</u>** தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் , கோயம்புத்தூர் நிறுவனத்திற்கு 2020–2021 ம் ஆண்டிற்கான நமது நகராட்சியின் பங்கு தொகையாக ரூ.20000/– அனுப்பி வைக்க ந.க.எண். 279/2020/எ2 நாள் . 18.08.2020 நகரியல் பயிற்சி நிறுவனம் இயக்குநரிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது . அதனை ஏற்று இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ரூ. 20000/– செலவு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:
1. அனுமதிக்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி தனிஅலுவலர் பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீரிக்கலாம் .

**ந.க.எண்.2506 /2016/சி1**

**தீர்மான எண் : 132 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.8.</u>** நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் மற்றும் DBC பணியாளர்களை வார்டு பகுதிகளில் பொதுமக்கள் கண்டு கொண்டிடவும், பிரதான சாலைகளில் பணிபுரியும் போது அவர்களின் பாதுகாப்பு நலன்கருதி ஒளிரும் சட்டை அணிந்து பணி மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை உள்ள காரணத்தினாலும், பணியாளர்களின் பாதுகாப்பு நலன் கருதியும் துப்புரவு பணியாளர்–41, DBC பணியாளர்கள்–40 மற்றும் பொறியியல் பணியாளர்கள்–20 ஆக மொத்தம் 100 எண்ணிக்கைகள் கொண்ட ஒளிரும் சட்டைகள் சென்னை, சிட்கோ நிறுவனத்தில் வாங்கிட அனுமதியும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 40,000/–க்கு மன்றத்தின் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கிட வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இச்செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.2519/2020/எச்1**

**தீர்மான எண் : 133 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது .**

<u>மன்றபொருள்.9.</u> இந்நகராட்சி பகுதியில் கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்கு கிருமி நாசினிகள் பிளீச்சிங் பவுடர் – 5000 கிலோ கிராம் மற்றும் நீர்த்த சுண்ணாம்பு – 5000 கிலோ கிராம் ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.1030/2020/எச்1 நாள்.15.05.2020ன்படி ஒப்பந்ததாரர் திரு.கே.மாரிமுத்து என்பவரிடம் வாங்கப்பட்டது. கொரோனா தொற்று நோய் பொருட்கள் இருப்பு பதிவேடு பக்க கண். 69 மற்றும் 80ல் பதிவு செய்யப்பட்டு, துப்புரவு கோட்டங்களுக்கு வழங்கப்பட்டது. எனவே அதற்கான தொகை ரூ.3,58,400/–யை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு–15ன்கீழ் திரு.கே.மாரிமுத்து, ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.1030/2020/எச்1**

**தீர்மான எண் : 134 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

<u>மன்றபொருள்.10.</u> இந்நகராட்சி பகுதியில் கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்கு கிருமி நாசினி லைசால் – 3000லிட்டர் ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.1030/2020/எச்1 நாள்.15.05.2020ன்படி மதுராந்தகம், கிரீன் அக்ரோ என்விரான்மெண்ட் சர்வீஸ் என்ற நிறுவனத்தில் வாங்கப்பெற்று கொரோனா தொற்று நோய் பொருட்கள் இருப்பு பதிவேடு பக்க எண்.10ல் ல்திவு செய்யப்பட்டு துப்புரவு கோட்டத்திற்கு வழங்கப்பட்டது. எனவே அதற்கான தொகை ரூ.5,17,440/–யை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு–15ன்கீழ் கிரீன் அக்ரோ என்விரான்மெண்ட் சர்வீஸ் என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.1030/2020/எச்1**

**தீர்மான எண் : 135 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

<u>மன்றபொருள்.11.</u> இந்நகராட்சி பகுதியில் கொரோனா தொற்று நோய் தடுப்பு பணியினை மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு முழு பாதுகாப்பு கவசம் அணிந்து கழிவுகளை பெறுவதற்கு PPE Kit 100 எண்ணிக்கைகள் ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.1030/2020/எச்1, நாள்.28.05.2020ன்படி காட்டுமன்னார் கோயில், தன்வந்திரி மகளிர் சுய உதவிக்குழு மூலம் பெறப்பட்டு கொரோனா தொற்று நோய் பொருட்கள் இருப்பு பதிவேடு டுக்க எண். 53ல் பதிவு செய்யப்பட்டு, பணியாளர்களுக்கு துப்புரவு கோட்டம் மூலமாக வழங்கப்பட்டது. எனவே அதற்கான தொகை ரூ.39,200/–யை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு–15ன்கீழ் தன்வந்திரி மகளிர் சுய உதவிக்குழுக்கு வழங்க மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.1030/2020/எச்1**

**தீர்மான எண் : 136 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

<u>மன்றபொருள்.12.</u> நகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தபடும் டாடா ஏஸ் வாகனம் TN31 AH 6642ன் தகுதி சான்று காலம் முடிந்து விட்டபடியால், தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகள் முழுவதும் அகற்றி, தகுதி சான்று பெறுவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.85,000/–க்கும் பொது சுகாதார அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் ஒப்பந்தப்புள்ளி அல்லது விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இச்செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.2034/2020/எச்1**

**தீர்மான எண் : 137 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.13.</u>** நகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தபடும் டாடா ஏஸ் வாகனம் TN31 AH 6556ன் தகுதி சான்று காலம் முடிந்து விட்டபடியால், தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகள் முழுவதும் அகற்றி, தகுதி சான்று பெறுவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.85,000/–க்கும் பொது சுகாதார அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் ஒப்பந்தப்புள்ளி அல்லது விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இச்செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து
செலவு செய்திடவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.2033/2020/எச்1**

**தீர்மான எண் : 138 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.14.</u>** நகராட்சி பொது சுகாதாரம், பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் பொது பிரிவில் பணிபுரியும் தகுதி வாய்ந்த பணியாளர்களுக்கு 2020–21 ஆண்டிற்க்கான சீருடைகள் – 2செட் மற்றும் தையற் கூலி தீபாவளி பண்டிகைக்கு முன்பாக வழங்க வேண்டி உள்ளதினால், சீருடைகளை காதி கிராப்ட் நிறுவனத்தில் வாங்கி வழங்கிட அனுமதியும், சீருடைகள் தைப்பதற்க்கான தையற்கூலியினை ரொக்கமாக வழங்கிடவும் செலவாகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இச்செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு
செய்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.2520/2020/எச்1**

**தீர்மான எண் : 139 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.15.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 2019 ஆம் ஆண்டிற்கு பின் இளம் பொறியியல் பட்டதாரிகளுக்கு Internship Traning பயிற்சி அளிக்கமாறு 28.08.2020 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் , செங்கல்பட்டு அவர்களிடமிருந்து மின்னஞ்சல் வரப்பெற்றது . அதனை தொடா்ந்து இளம் பொறியியல் பட்டதாரிகளுக்கு Internship Traning பயிற்சி அளிக்க மாவட்ட அளவில் “ தினத்தந்தி “ நாளிதழில் விளம்பரம் செய்ததில் ரூ . 8014/–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.2221/2020/இ1**

**தீர்மான எண் : 140 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.16.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி குடிநீர் நிதியில் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அவசர அவசியம் கருதி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் . 7 , 6 , 27 மற்றும் 29 ல் உள்ள சத்துணவு கூடங்களின் மின் மோட்டார் பழுதடைந்ததை பழுது நீக்கி மீண்டும் பொருத்தி தண்ணீர் சப்ளை செய்து கொடுத்ததிற்கு திருமதி. S.புவனேஸ்வரி அவர்களுக்கு பட்டியல் தொகை ரூ. 25,000 வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கம் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்

**ந.க.எண். 1041/2020/இ1**

**தீர்மான எண் : 141 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.17.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி குடிநீர் நிதியில் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அவசர அவசியம் கருதி நகராட்சிக்கு சொந்தமான ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் உள்ள குடிநீர் மின் மோட்டார் பம்பு பழுது அடைந்ததை பழுது நீக்கியதற்கும் மற்றும் பழுது அடைந்த மின் விளக்கு , மின் விசிறிகளை பழுது நீக்கி பயன்பாட்டில் கொண்டு வரப்பட்டதற்கு Enoch Electricals , 105 ,B குடிதாங்கி

மெயின் ரோடு நெல்லிக்குப்பம் அவர்களுக்கு பட்டியல் தொகை ரூ. 14550/— வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கம் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்

**ந.க.எண். 1349/2020/இ1**

**தீர்மான எண் : 142 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.18.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலர் அவர்கள் மழை காலங்களில் மழை நீர் முழுவதும் மெயின் ரோட்டிலிருந்து சுகாதார வளாகத்தினுள் அனைத்து பகுதிகளிலும் வந்து தேங்கியுள்ளதால் மருத்துவ அலுவலர் , புறநோயளிகள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் உள்ளே நுழைய முடியாமல் சுகாதார சீர்கேட்டினை ஏற்படுத்துவதாக கோரியுள்ளார்கள் . எனவே மேற்படி பகுதியில் மழைநீர் தேங்காமல் இருக்கவும் , கழிவுநீர் வெளியே செல்ல மருத்துவமனையை மேம்பாடு செய்து மழைநீர் வடிகால் அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 2,00,000 ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.2579/2020/இ1**

**தீர்மான எண் : 143 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி